Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.42/2019**

**Deposition of PW.3 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | ஜாதி | : | |
| த/பெ | : | குமரேசன் | தொழில் | : | மாவட்ட பதிவாளர், தாம்பரம். |
| கிராமம் | : | மதுரை | சமயம் | : | |
| தாலுகா | : | மதுரை | வயது | : | 43/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025.

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் மாவட்ட பதிவாளராக தாம்பரத்தில் பணியாற்றி வருகிறேன். கடந்த 2015 ஆம் ஆண்டு சின்னாளபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணியாற்றிய போது, மதுரை பாஸ்போர்ட் அலுவலகத்தில் இருந்து பிறப்புச் சான்றிதழின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்காக எனக்கு கடிதம் வந்தது. சவரிதாஸ், த/பெ. சவரிமுத்து என்பவரின் பிறப்புச் சான்றிதழின் உண்மைத் தன்மை குறித்து அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளை கொண்டு சரிபார்த்தேன். மேற்படி நபரான சவரிதாஸ், த/பெ. சவரிமுத்து என்பவருக்கு சின்னாளபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து எந்த பிறப்புச் சான்றிதழும் வழங்கவில்லை என்று தெரியவிந்தது. மேற்படி விபரத்தை 05.06.2015 அன்று கடிதம் மூலம் மதுரை, பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு 05.06.2015 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அவரிடம் மேற்படி விபரங்களை நான் கூறினேன். நான் அனுப்பிய கடிதத்தையும் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor